பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3·50

UTHAYAN

சுடர்: 5 பிரமோதூத ஹூ ஐப்பசி மீ 24 உ சனிக்கிழமை (10 - 11 - 1990) ஹிஜ்ரி 1410 ற. ஆகிர் 21 கதிர்: 248

# ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பகுதி மீதும் விமானக் குண்டு வீச்சு!

## இயங்கத் தொடங்கிய முதல்நாளே இணக்கத்தை மீறியது அரசபடை

யாழ்ப்பாணம், நவம்பர் 10

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி நேற்று இயங்கத் தொடங்கிய முதல் நாளே — இரண்டு மணி நேரத்துக்குள்ளேயே — அது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுடன் ஏற்பட்ட இணக்கத்தை மீறியது இலங்கை அரசாங்கம்.

இலங்கை அரசாங்கத்தின் விமானப்படை பொம்மர் ஒன்று ஆஸ்பத்திரி வளவுக்கு அருகில் பாதுகாப்புப் பகுதி எனப் பிரகடனப்படுத்தப்பட்ட இடத்தில் கண்மூடித்தனமான குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியது.

நேற்றுக்காலை 7-45 மணியளவில் நகருக்கு மேல் வட்டமிட்ட இரண்டு பொம்மர்களில் ஒன்று திடீரென குத்திப் பதிந்து அடுத்தடுத்து இரு தடவைகள் குண்டுகளை வீசியது.

பருத்தித்துறை வீதி — ஆஸ்பத்திரி வீதிச் சந்திப்பில் — யாழ். போதனா ஆஸ்பத்திரியின் ஒரு மூலைப் பகு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சர்வதேசக் கடப்பாடுகளை இலங்கை அரசு மீறிவிட்டது

### செஞ்சிலுவை அதிகாரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 10

ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பகுதியில் விமானக் குண்டு வீச்சை நடத்தியதன் மூலம் இலங்கை அரசு சர்வதேசக் கடப்பாடுகளை மீறிவிட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ் பிரதிநிதிகள் அணித் தலைவர் திரு ஜோர்ஜ் பற்றசன் இவ்வாறு நேற்றுக் குற்றம் சுமத்தினார்.

இந்தச் சம்பவம் குறித்து செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழு விடுத்த அறிக்கையை, பத்திரிகையாளரிடம் வழங்கி, அது பற்றி விளக்கமளித்த போது அவர் இப்படிக் கூறினார்.

திரு. ஜோர்ஜ் மேலும் கூறியதாவது:-

முதலாவது —

ஆத்திரமூட்டப்படாமல் — காரணம் ஏதுமின்றி — பொது மக்கள் வாழும் குடியிருப்பு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## விமானத் தாக்குதல் குறித்து செஞ்சிலுவை அறிக்கை

யாழ்ப்பாணம், நவ. 10

நேற்றுக் காலை இடம்பெற்ற விமானத் தாக்குதல் சம்பவம் குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நேற்று நண்பகல் 12. 30 மணியளவில் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டதாகக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## தவறுதலாக நடந்ததாம்!

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி மீது நேற்று நடத்தப்பட்ட விமானத் தாக்குதல் தவறுதலாக நடந்தது — என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்தார்.

இனிமேல் அப்படி நடக்காது பார்த்துக் கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை விமானத் தாக்குதல் குறித்து செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்ட அறிக்கையை பல வெளிநாட்டுச் செய்தி ஏஜன்சிகள் முக்கியத்துவம் கொடுத்து அறிவித்தன. [அ]

## சாவகச்சேரியில் ஐவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 10

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியில் நேற்று முற்பகல் 10 மணியளவில் பொம்மர் குண்டுகளை வீசி தாக்குதலை மேற்கொண்டது.

இத்தாக்குதலில் அப்பகுதியிலிருந்த பொது மக்களில் ஐவர் மரணமடைந்தனர். மற்றும் சிலர் காயமடைந்தனர்.

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்குச் சமீபமாக நடந்த இந்தக் குண்டு வீச்சுக்களினால் 'வெல்டிங் கராஜ்', வீடுகள், கடைகள் என்பன சேதமாகின. அப்பகுதியில் இருந்த மரங்கள் சிலவும் முறிந்து வீழ்ந்தன.

மகளிர் கல்லூரிக்கு வருகை தந்திருந்த ஆசிரியர்களும், மாணவிகளும் பதுங்குகுழிகளினுள் புகுந்து [illegible]

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காங்கேசனில் சிப்பாய் பலி

கொழும்பு, நவ. 10

காங்கேசன்துறையில் விடுதலைப் புலிகள் நடத்திய சினைப்பர் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார் என்று கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. [ஒ-எ]

## மாவீரர் நாள் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ. 10

தமிழீழத்தின் சிறப்பான பொருளாதார மேம்பாடுகளை வெளிப்படுத்த தமிழீழ ஆய்வு நிறுவனமும் யாழ் பல்கலைக்கழக மருமலர்ச்சிக் கழகமும் இணைந்து [illegible]

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொக்குவில் குண்டு வீச்சில் வயோதிபர் உயிரிழப்பு

கொக்குவில், நவ. 10

கொக்குவில், அம்பட்டப் பாலத்தடிக்குச் சமீபமாக நேற்றுக் காலை 7.45 மணியளவில் பொம்மர்கள் குண்டு வீச்சுக்களை நடத்தின.

அப்போது வீதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த வயோதிபரான கொக்குவில் நந்தாவிலைச் சேர்ந்த செல்லையா துரைரத்தினம் (69 வயது) அந்த இடத்திலேயே பலியானார்.

வீசப்பட்ட இரு குண்டுகளும் பனங்காணி ஒன்றுக்குள் விழுந்து வெடித்தன.

இதனால் பனை மரங்கள் பல பிடுங்கி வீசப்பட்டன. இரு வீடுகள் சேதங்களுக்குள்ளாகின. [ஒ 69-6[

## திருநெல்வேலிப் பகுதியில் வீடுகள் பல சேதமுற்றன

திருநெல்வேலி தபாற்கட்டைச் சந்திக்குச் சமீபமாகவும் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் பொம்மர் குண்டு வீச்சு இடம்பெற்றது.

இந்தப் பகுதியில் வீசப்பட்ட குண்டுகளினால் வீடுகள் பல சேதமடைந்தன. இவற்றில் மூன்று வீடுகள் பலத்த சேதமுற்றன.

பென்னம்பெரிய வேப்ப மரம் ஒன்று தூக்கி வீசப்பட்டதால் ஒரு வீடு பலத்த சேதமானது.

இப்பகுதியில் மின்கம்பிகள் அறுந்து காணப்பட்டன. மரங்கள் பல முறிந்து கிடந்தன.

குண்டு வீச்சின் போது வீதியால் சென்ற செல்லத்துரை பொன்னுத்துரை (65 வயது) — கோண்டாவில், எஸ். வரதராசா (30 வயது) — கொக்குவில் ஆகிய இருவரும் காயமடைந்தனர். [ஒ-6-69-15-143]

## நல்லூரில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், நவ. 10

நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அருகில் - கோவில் வீதியில் - சங்கிலியன் வீதிக்குச் சமீபமாக நேற்று முற்பகல் 11 மணியளவில் நடந்த விமானக் குண்டு வீச்சில் இளைஞர் ஒருவர் பலியானார்.

இச்சம்பவத்தில் மேலும் சிலபொதுமக்கள் காயமடைந்தனர் என்றும் அறியவந்தது.

குண்டு வீச்சில் இரு வீடுகள் பலத்த சேதமாகின. [ஒ-6]

## அரியாலையிலும் தாக்குதல்

அரியாலைப் பகுதியிலும் நேற்றுக்காலை 8.50 மணியளவில் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

அரியாலை நெடுங்குளம் வீதி, சித்திவிநாயகர் ஒழுங்கை ஆகிய இடங்களில் குண்டுகள் வீசப்பட்டன.

இதனால் நெடுங்குளம் வீதியில் உள்ள ஒரு வீடு பலத்த சேதமடைந்தது வீட்டில் இருந்தவர் வெளியே ஓடியதால் உயிர்தப்பினார்.

சித்தி விநாயகர் ஒழுங்கையிலும் ஒரு வீடு பலத்த சேதமடைந்தது. இவ்விரு இடங்களிலும் மேலும் பல வீடுகளின் கூரைகள், கண்ணாடிகள் நொருங்கிச் சிதறின. (ஒ-5)

## பாஷையூரிலும் நேற்று பொம்மர்கள் குண்டு வீச்சு

பாஷையூர் கடற்கரை வீதியில் நேற்றுக் காலை 9 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

அடுத்தடுத்து வீசப்பட்ட குண்டுகளினால் இப்பகுதியில் பல வீடுகள் சேதமடைந்தன. அவற்றில் இரு வீடுகள் பெரிதும் சேதமுற்றன.

திருச்சிலுவைக் கன்னியர் மடம், காப்புறுதிக் கூட்டுத்தாபன சுற்றுலா விடுதி என்பனவும் சேதமுற்றனவற்றில் அடங்குகின்றன.

இச்சம்பவத்தில் திருமதி கனகராசா [35 வயது], ராஜ்குமார் கனகராசா [7 வயது], மோகன் அன்ரன் [30 வயது]. எமலியானுஸ் [31 வயது] ஆகியோர் காயமடைந்தனர். (ஒ-51-5)

உலர் உணவு நிவாரணத்தின் புதிய பங்கீட்டு விவரம் 5 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விண்ணப்பப் படிவங்கள்

மொறட்டுவை பல்கலைக் கழக அனுமதிக்கான படிவம் யாழ் தொழில் நுட்பக் கல்லூரிக்கான படிவம், திறமை மூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் இலங்கை அதிபர்கள் சேவை தரம் II இற்கான படிவம் யாவற்றிற்கும் நாயக பாலன் ஸ்ரோர்ஸ், மானிப்பாய். (சி/5386)

சுய விருப்பத்தில் இளைப்பாறும் ஊழியர்களுக்கான படிவம், விபரம் விலை ரூபா 1/- விற்பனையாகின்றது. பெறவிரும்புவோர்நேரில் வந்து பெற்றுக் கொள்ளலாம். விபரங்களையும் பார்வையிடலாம். தொடர்பு நாயகபாலன் ஸ்ரோர்ஸ். மானிப்பாய். (சி/5385)

### வண்ணப் பதிப்பு

பாலர் பாடசாலை ஆசிரியைகள் கவனத்துக்கு: அஷ்டலக்ஷ்மி பாலர் தமிழ் சீர்திருத்த எழுத்துக்களுடன் (வண்ணப் பதிப்பு) விற்பனையாகின்றது. விலை ரூபா 12/-; ஆட் பேப்பரில் ரூபா 15/-. கிடைக்குமிடம்: பூபாலசிங்கம் புத்தக சாலை, மண்டேலா ரேடர் நல்லூர், அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. [14713]

### தவறிவிட்டது

7-10-90 அன்று பிற்பகல் 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் எனது மூக்குக் கண்ணாடி பலாலி வீதி ஆரியகுளம் சந்திக்கும் திருநெல்வேலி சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டு எடுத்தவர்கள் அ. திருநாவுக்கரசு 40/2, கோவில் வீதியில் உள்ள எனது வீட்டில் ஒப்படைக்கவும். (14722)

### அறிவித்தல்

யாழ்ப்பாணம் ஜுபிலி பசாரில் இயங்கி வந்த சிங்கர் கிளை மீண்டும் அதே இடத்தில் இயங்குகின்றது என்பதனை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம். (14723)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் தனிப்பட்ட முறையில் உங்கள் வீடுகளுக்கு வந்து ஆரம்ப அறிவிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். ஜெயராஜா, 204, மானிப்பாய் வீதி. ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (14551)

### FUDO

Typewriters - தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் - விற்கவும், சிறந்த முறையில் திருத்தவும் FUDO, 39/17, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம் கிளை, பிரதான வீதி, மானிப்பாய். (C/5398)

### அல்டி (ALDI)

நவீன கைக்கடிகாரங்கள் சுவர் மணிக்கூடுகள், மணிக்கூடு பற்றறிகள் நியாய விலையில் பெற்றுக்கொள்ளவும். உங்கள் மணிக்கூடுகளை நல்ல முறையில் திருத்திக் கொள்ளவும் யாழ்நகரில் சிறந்த ஸ்தாபனம் 'அல்டி' 269/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். ஏற்கனவே மணிக்கூடு திருத்தத் தந்தவர்கள் 10 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளவும். யாழ் நகரில் 'அல்டி' ஓர் நம்பிக்கையான ஸ்தாபனம். [சி.5379]

### வாங்கலாம், விற்கலாம்

நாள்தோறும் திறந்திருக்கும். பழைய புத்தகங்கள் வாங்கப்படும், விற்கப்படும். சேனாதிராசா Second Hand Book, House 18/6, ஸ்ரான்லி றோட், இலங்கை வங்கி முன் லேன், யாழ்ப்பாணம். (14720)

### தேவை

வேளாங்கண்ணி வைத்திய சாலையில் வேலை செய்வதற்கு பெண் பிள்ளைகள் தேவை. காலை 9—12 மாலை 3 30—5 00 மணி வரை சந்திக்கலாம். டாக்டர் எம். கருணாகரன் 614. மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [14719]

### மல்லிகை வெள்ளி விழாமலர்

படிக்கலாம், பாதுகாக்கலாம் பரிசளிக்கலாம், பல்வேறு நாடுகளுக்கும் அனுப்பலாம். உள்ளடக்கச் செழுமை மிக்க மலர் உயர் வகுப்பு மாணவர்களுக்குப் பயனுள்ளது. வேறு புத்தகங்களும் கிடைக்கும் மல்லிகை 234 B, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். [14725]

### இப்பில் இப்பில்

கால்நடை தீவனமாகவும் விறகாகவும் பயன்படும் இப்பில் இப்பில் விதைப்பைக்கற் பெற்றிட ரூபா. 2 00க்கான அஞ்சல் முத்திரை அனுப்பவும். மில்க்வைற் யாழ்ப்பாணம். [சி/5391]

### டில்க்கா வாச் வேக்ஸ் [Dilka Watch Works]

வாடிக்கையாளரின் வசதிக்கமைய எமது ஸ்தாபனம் மானிப்பாய் வீதி ஆனைக்கோட்டையிலும் 3, சித்தன் கேணி வீதி, பண்டத்தரிப்பிலும் இயங்குகின்றது. சகல மணிக்கூடுகளும், றேடியோக்களும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். சகலஎலக்ரோனிக் கடிகாரங்களின் பற்றறிகளும் விற்பனைக்கு உண்டு. (14613)

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்துக்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு) "மண்டேலா ரேடர்" இல 256A, பருத்தித்துறை வீதி நல்லூர், யாழ்ப்பாணம். [14550]

### வண்ணப் பதிப்பு

சீர்திருத்த எழுத்துக்களுடன் பாலர்தமிழ் (வண்ணப் பதிப்பு) ரூபா 12/-; ஆட் பேப்பரில் ரூபா 15/-; வியாபாரிகளுக்கு கழிவு 15% நேரில் வருக: அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. (14714)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**பொன்னுச்சாமி சிவலோகநாதன்**
(B. Sc. Eng)

அந்தியர் அழிப்பு:
10 - 11 - 1987

அன்பு, பண்பு, பாசத்தை அரவணைத்த அப்பா ஆண்டுகள் மூன்று கழிந்தாலும் ஆறவில்லை எம் கண்ணீர் கதியற்றுக் கலங்கும் இக் கடுங்கால வேளை தனில் விரைந்து வந்து காத்திடுவீர் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எம் கண்ணீர் துளிகளினால் அர்ச்சிக்கின்றோம்.

உம் நினைவால் வாடும்
அன்பு மனைவி, மகன்,
உற்றார்.
கல்லூரி ஒழுங்கை,
கோப்பாய் (13702)

## ★ YARL HALL ★

கல்வி நிலைய மாணவர்களுக்கு
இங்கு நடைபெற்று வந்த (ஆண்டு 9, 10, 11)
வகுப்புக்கள் யாவும்
நல்லூர் Science Academy இல்
நடைபெறுகின்றன
புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்

விஞ்ஞானம்
இரா. செல்வவடிவேல்.
[14717]

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் தனுக்கோடி வேதநாயகம்

தோற்றம்:
18 - 12 - 1918
நெடுந்தீவு

மறைவு:
10 - 11 - 1989
பெரியதம்பனை மடுக்கோவில்

உழைப்பதே இன்பம் என்றார்
வறுமையே நண்பன் என்றார்
வாழ்விலே நீதி தான் - வகுத்தவன்
கடமை என்று வாழ்ந்த
அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

130, மவுண்ட்கார்மல் வீதி,
யாழ்ப்பாணம். [14728]


## இசை ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி

மருதனார்மட கோட்டக் கல்விக்கு உட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் இசை ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்பு 12-11-1990 அன்று காலை 9.00 மணி தொடக்கம் 12 மணி வரை இராமநாதன் கல்லூரியில் சுன்னாகத்தில் நடைபெறும். இப்பயிற்சி வகுப்பில் சகல இசை ஆசிரியர்களும் தவறாது பங்குபற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**யோ. செல்லையாபிள்ளை,**
சேவைக்கால இசை ஆசிரிய ஆலோசகர்.

[சி-5396]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



தோற்றம்:
06 - 02 - 1917

மறைவு:
11 - 10 - 1990

### திரு. சங்கரப்பிள்ளை நாகலிங்கம்

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் உங்கள் நினைவு எங்களை விட்டு என்றும் அகலாது.

அன்னாரின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (10 - 11 - 90) சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும் உற்றார், நண்பர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

அவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. [14730]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
21 - 06 - 1970

மறைவு:
21 - 10 - 1989

திதி:
10 - 11 - 1990
[சனிக்கிழமை]

செல்வன்
### லோகேஸ்வரன் உதயக்குமார்
(தயா)
(வடபிராந்திய போக்குவரத்துச்சபை, கோண்டாவில்)

ஓடி மறைந்தது ஓராண்டு மகனே!
தேடி அலைகின்றோம் தினமும் உன் ஆவியை
மூடி மறைக்க முடியாத உன் நினைவை
பாடி மறைக்க முயல்கின்றோம் முடியவில்லை
ஆண்டொன்று சென்ற போதும்
ஆறுதல் மனதிலில்லை
அருமையாய் வளர்த்திட்ட நம்
ஆண்மகன் கதையே சோகம்!

அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
அப்பா, அம்மா, அக்கா, தம்பி, தங்கை,
மற்றும் உடன் பிறவாச் சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

உடையார் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். [14632]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரசேகர் புதிய பிரதமர்!

## இன்று பதவியேற்பார்

புதுடில்லி, நவ. 10
இந்தியாவின் ஒன்பதாவது பிரதமராக திரு. எஸ். சந்திரசேகர் இன்று 10 ஆம் திகதி காலை பதினொரு மணியளவில் பதவி ஏற்பார்.

அவருக்கு இன்று ஜனாதிபதி வெங்கட்ராமன் பதவிப் பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்து வைப்பார்.

நேற்று திரு. வெங்கட்ராமனை திரு. சந்திரசேகர் சந்தித்து அரை மணி நேரம் பேசினார்.

அப்போது தனக்குள்ள பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கும் தஸ்தாவேஜுகளை ஜனாதிபதியிடம் அவர் ஒப்படைத்தார்.

அதனைத் தொடர்ந்து, புதிய அரசாங்கத்தை அமைக்கும்படி திரு. சந்திரசேகரை ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். (உ-எ)

## 280 எம். பிக்களின் ஆதரவு கிடைக்கும் என்கிறார்

புதுடில்லி, நவ. 10
529 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் எனது அரசுக்கு 280 எம். பிக்களின் ஆதரவு உண்டு. இதனை நான் நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பின் போது நிரூபிப்பேன்.

—இப்படி திரு சந்திரசேகர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஸ்திரமான ஆட்சி ஒன்றை மக்களுக்கு வழங்க முடியும் என்று நம்புவதாகவும் சந்திரசேகர் கூறினார்.

இதேவேளை—

ஜனாதிபதி செயலகம் வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில்—

திரு சந்திரசேகருக்கு ஸ்திரமான அரசு ஒன்றை அமைக்கக்கூடிய நிலையில் இருப்பதாக ஜனாதிபதி கூறுவதாலும்—

நாட்டை இக்கட்டான இன்றைய நிலையில் தேர்தல் ஒன்றில் மாட்டிவைக்க விரும்பாததாலுமே திரு சந்திரசேகர் ஆட்சி அமைக்க அழைக்கப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது (உ-எ)

## பலத்தை நிரூபிப்பதற்கு 10 நாட்கள் காலக்கெடு

புதுடில்லி, நவ. 10
திரு சந்திரசேகரைப் பிரதமராகக் கொண்ட ஜனதா தள் சோஷலிஸ்ட் அரசாங்கம், தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்க வசதியாக இம்மாதம் 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் பிரதமர் என்ற முறையில் திரு சந்திரசேகர் புதிய அரசின் சார்பில், நம்பிக்கை கோரும் பிரேரணையைச் சமர்ப்பிப்பார்— என்றும் அறிவிக்கப்பட்டது (உ-எ)

## ஒரு தலைப்பட்சமாக ஆதரவு வாபஸாகாது!

### ராஜீவ் அளித்துள்ள உறுதி

சந்திரசேகரின் அரசாங்கத்துக்கு வழங்கும் ஆதரவை இந்திரா காங்கிரஸ் ஒரு தலைப்பட்சமாக வாபஸ் வாங்காது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று பி. பி சிக்கு அளித்த பேட்டியில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

லண்டனில் இருந்து பி பி சி செய்தியாளர் ஜோன் ஹம்ப்ரி தொலைபேசி மூலம் ராஜீவ் காந்தியைப் பேட்டி கண்டார்.

கேள்வி:- புதிதாகப் பொதுத் தேர்தலை நடத்தும் நேரம் வந்துவிட்டது என்று கூறி, சந்திரசேகரின் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை நீங்கள் திடீரென்று வாபஸ் வாங்கமாட்டீர்களா?

ராஜீவ்: அப்படிச் செய்ய மாட்டோம். சந்திரசேகரின் பூரண ஒத்துழைப்புடனும் ஜனதாதள் சோஷலிஸ்ட் கட்சியின் விருப்பத்துடனும் தான் புதிய பொதுத் தேர்தலை நடத்துவது பற்றி இந்திரா காங்கிரஸ் தீர்மானிக்கும். [உ-எ]

## அரசியல் பட்டதாரி இன்று பிரதமராகுகிறார்

புதுடில்லி நவ. 10
இன்று இந்தியாவின் பிரதமராக பதவியேற்கும் 63 வயதான திரு. எம். சந்திரசேகர், ஓர் அரசியல் விஞ்ஞானப் பட்டதாரி.

1962 இல் ராஜ்ய சபைக்கு சோஷலிஸ்ட் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. சந்திரசேகர், இரண்டு ஆண்டுகள் கழித்து காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தார். அக்கட்சியில் ''யங்டேர்க்ஸ்'' (Young Turks) குழுவிற்குத் தலைமை வகித்தார்.

தமது 40 வருடகால அரசியல் வாழ்வில் திரு. சந்திரசேகர் அமைச்சராகக் கூட பதவி வகித்ததே கிடையாது.

1975 ஆம் ஆண்டு பிரதமராக இருந்த இந்திரா காந்தி அவசரகாலச் சட்டத்தை பிறப்பித்தார். இதனை ஆட்சேபித்து காங்கிரஸிலிருந்து சந்திரசேகர் வெளியேறினார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன் சந்திரசேகரும் சிறை வைக்கப்பட்டார்.

பின்னர் ஜனதா கட்சியில் சேர்ந்தார். 1989 இல் ஜனதா தள் கட்சியில் இணைந்தார்.

இப்போது அவர் ஜனதா தள் கட்சியில் இருந்து பிரிந்து சென்று ஜனதா தள் சோஷலிஸ்ட் கட்சியை அமைத்து இந்தியாவின் [illegible] பதாவது பிரதமராகிறார். (உ-எ)

## பிரியாவிடை

புதுடில்லி, நவ 10
பதவி விலகும் பிரதமர் வி பி சிங் நேற்று இரவு நாட்டு மக்களுக்கு பிரியாவிடை உரை நிகழ்த்தினார்: ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் அவர் உரை இருந்தது (உ-எ)

## ராஜினாமா!

லண்டன், நவ. 10
பிரிட்டனில் உள்ள இந்திய ஹைகமிஷனர் குல்திப் நய்யார் நேற்று ராஜினாமாச் செய்தார். [உ-எ]

## 200 பேருக்கே இனி அனுமதி

யாழ்ப்பாணம், நவ. 10
இலங்கை வங்கி ஆஸ்பத்திரி வங்கிக்கிளையில் பணம் மீளப்பெறச் செல்லும் வாடிக்கையாளர்களில் 200 பேர் மட்டுமே இனி வங்கி வளவுக்குள் அனுமதிக்கப்படுவர்.

எதிர்வரும் திங்கட்கிழமை முதல் இந்த நடைமுறை அமுல் செய்யப்படும் எனத் தெரியவருகிறது

அத்துடன் வங்கி வளவுக்குள்ளோ, அதன் முன்புற வீதியோரமாகவோ சைக்கிள் உட்பட எந்த வாகனமும் நிறுத்த முடியாது.

பாதுகாப்பின் நிமித்தமே இந்த நடைமுறை அமுல் செய்யப்படுவதாக வங்கியின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (அ-3)

## மீண்டும் தேவிலால் துணைப் பிரதமர்

புதுடில்லி, நவ. 10
ஜனதாதள் சோஷலிஸ்ட் அமைச்சரவையில் துணைப் பிரதமராக தேவிலால் இருப்பார்.

இதனை திரு. தேவிலாலே நேற்று செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வி. பி. சிங் அமைச்சரவையிலும் தேவிலால் துணைப் பிரதமராக இருந்ததும்- பின்னர் ஏற்பட்ட நெருக்கடியில் தேவிலாலை துணைப்பிரதமர் பதவியில் இருந்து திரு. சிங் வெளியேற்றியதும் தெரிந்ததே. (உ-எ)

## போபர்ஸ் பேர ஊழல்; கோவைகளில் சிங் கவனம்

புதுடில்லி, நவ. 10
போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் தொடர்பான கோவைகளை ஜனாதிபதி வெங்கட்ராமன் தமது பொறுப்பில் உடனடியாக எடுத்துக் கொள்ளவேண்டும்.

— இப்படிபிரதமர்பதவியை ராஜினாமாச்செய்த பின்னர், திரு வி.பி. சிங் தெரிவித்தார்.

ஜனாதிபதியைச் சந்தித்து இதனைத் தெரிவிக்கப்போவதாகவும் அவர் சொன்னார்.

ராஜீவ்காந்தியின் அரசின் கீழ் போபர்ஸ் பீரங்கி பேர ஊழல் இடம்பெற்றது

இது தொடர்பாக ஜனதா தள் அரசு நடத்திய விசாரணை தற்போது இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## புத்தளத்தில் படகு விபத்து

கொழும்பு, நவ. 10
புத்தளம் மாவட்டத்தில் வென்னப்புவ என்னுமிடத்தில் இடம்பெற்ற படகு விபத்து ஒன்றில் 25 பேர் உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது,

விபத்து நடந்தபோது படகில் 30 பேர்வரை பிரயாணம் செய்தனர் என்று கூறப்பட்டது. [அ-எ]

## மட்டக்களப்புப் பகுதியில் மட்டும் 1,115 பேர் காணாமற் போயினர்!

மட்டக்களப்பு, நவ. 10
கடந்த ஜூன் மாதத்தின் பின்னர், மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் 1,115 பேர் காணாமற்போயுள்ளார்கள் என இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை வந்தாறுமூலை அகதிகள் முகாமில் இருந்து 158க்கும் மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்ட போதிலும்; 32 பேரை மட்டுமே கைது செய்ததாகப் பாதுகாப்புப் படையினர் இப்போது தெரிவிக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த மக்களில் சரி அரைப்பங்கினருக்கு மேல் இடம்பெயர்ந்துள்ளனர். அவர்களில் 90சத வீதத்தினர் நிவாரணப் பொருள்களைக் கொண்டே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது.

இதேவேளை திருகோணமலையிலும் 278 பேர் படையினரால் கைதுசெய்யப்பட்ட பின்னர் காணாமற்போயுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. முஸ்லிம் ஊர்காவல் படையினரால் கூட்டிச் செல்லப்பட்டுக் காணாமற் போனவர்களின் எண்ணிக்கை இன்னமும் சரியாக ஊர்ஜிதப்படுத்தப் படவில்லை.

இதேவேளை திருகோணமலையில் தமிழர் பகுதிகளில் உள்ள கோவில் காணிகளில் சிங்களவர்கள் குடியேற்றப்படுவதாகவும் அறிய வந்துள்ளது. [அ]

## பாஸ்டர் ஜோண் காலமானார்

யாழ்ப்பாணம், நவ 10
இலங்கை பெந்தேகொஸ்தே சபையின் உப தலைவரும் யாழ்ப்பாணப் பிராந்தியத் தலைவருமான பாஸ்டர் ஏ. ஜோண் நேற்று வெள்ளிக்கிழமை சுண்டிக்குளியில் உள்ள விசுவாச இல்லத்தில் காலமானார்.

1920 ஆம் ஆண்டு இந்தியாவின் அறங்கோணத்தில் பிறந்த பாஸ்டர் ஏ. ஜோண் தமது 19 ஆவது வயதில் ஊழியம் செய்வதற்காக இலங்கை வந்திருந்தார். [இ]

## கப்டன் செந்தில் வீரமரணம்

யாழ்ப்பாணம், நவ. 10
கடந்த 3ஆம் திகதி மாவிட்டபுரத்தில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த கப்டன் செந்தில் (சுப்பிரமணியம் ஞானேஸ்வரன்—மாதகல்) நேற்று அதிகாலை 2 மணியளவில் வீரமரணமடைந்தார்.

பலாலியில் நேற்று முன்தினம் ராணுவத்துடன் இடம்பெற்ற மோதலில் 2 ஆவது லெப்டினன்ட் சிரஞ்சீவி [கனகசபாபதி ஐங்கரன்—சுன்னாகம்] என்ற போராளி வீரமரணமடைந்தார். [உ]

## மினிபஸ் சேவை

தென்மராட்சி, நவ. 10
சாவகச்சேரி — பளைக்கும் [illegible] சேவை ஒன்று ஆரம்பிக்கப் பட்டுள்ளது. [ஓ-117]

## வாகனம் வாங்க சென்றவர் கொழும்பில் மரணம்!

யாழ்ப்பாணம், நவ 10
கொழும்பில் உள்ள பிரபல மோட்டார் வாகனக் கம்பனி ஒன்றில் வாகனம் வாங்குவதற்கான பணத்தைச் செலுத்திவிட்டு வெளியே வந்த வடபகுதியைச் சேர்ந்த பொறியியலாளர் ஒருவர் இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டு நாலாவது மாடிக்கு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். நேற்று முன்தினம் வியாழக்கிழமை அவரது மரண அறிவித்தலை வானொலியில் கேட்ட இங்குள்ள உறவினர்கள் பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

வெற்றிவேலு சரவணபவான் (வயது 41) என்பவர் ஜப்பான் சுமிற்றோமோ சிமெண்ட் கம்பனியில் பொறியியலாளராகக் கடமையாற்றியவர்.

சமீபத்தில் நாடு திரும்பி தமது சொந்த ஊரான சண்டிலிப்பாய் மாகியப்பிட்டி வந்திருந்தார்.

பின்பு கடந்த அக்டோபர் 18 ஆம் திகதி கொழும்பு சென்றார். கடந்த 22 ஆம் திகதி தமது பத்து வயது மகனுடன் ஆட்டோ ஒன்றில் பிரஸ்தாப கம்பனிக்குச் சென்று வாகனத்துக்கான பணத்தைக் கட்டிவிட்டு வந்த போது இரகசியப் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார்.

இவரது உறவினர்கள் இவர் கைதாகி 5 ஆவது நாள் இவரைச் சென்று பார்க்க அனுமதி அளிக்கப்பட்டிருந்தது.

தற்போது அகால மரணமான தகவலை வானொலி மரண அறிவித்தலில் கேட்ட இங்குள்ள உறவினர்கள் நடந்தது தெரியாது அங்கலாய்க்கின்றனர். (இ)

## மாவீரர்நாள் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ 10
யாழ் மாவட்ட கூட்டுறவாளர்கள் நடத்தும் தமிழீழ மாவீரர் நாள் ஒழுங்கமைப்பு முன்னேற்றம் சம்பந்தமான கலந்துரையாடல் சங்க பிரதிநிதிகள் மட்டத்தில் எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கள் காலை 10. 30 மணிக்கு திருநெல்வேலி விவசாய போதனாசிரியர் பாடசாலையில் நடைபெறும்.

சங்கபிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மாதிரி நிர்வாகச் செயலக கூட்டுறவுப் பகுதியினர் கேட்டுள்ளனர். (இ)

## பழைய இடத்தில்

சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை மீண்டும் யாழ். நகரில்- விக்டோரியா வீதியில் உள்ள கட்டடத்தில் இயங்கத் தொடங்கியுள்ளது. [ஓ-6]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவாகி - சாவகச்சேரி

## A/L 90, 91, 92 கலைவர்த்தகம்

இன்று ஆரம்பம்:

**10 - 11 - 90 சனி 2 p.m**

[சி-5392]



## ரதிவோச் வேக்ஸ்

யாழ்ப்பாணம்

எமது ஸ்தாபனம் ஆறுகால்மடம் ஆனைக்கோட்டையில் இயங்கிவருகின்றது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அறியத் தருகின்றோம். எமது ஊழியர்கள் 11-11-90 இல் (ஞாயிறு) பி.ப 2.00 மணியளவில் இடம்பெறும் கலந்துரையாடலில் தவறாது சமுகம் தருமாறும் வேண்டப்படுகின்றனர்.

(14729) நிர்வாகம்.



## லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

மேற்படி ஸ்தாபனம் மீண்டும் முன்னைய பினான்ஸ் கம்பெனி கட்டடத்தில் (249, மின்சார நிலைய வீதி) தமது விற்பனையை 5-11-90 முதல் ஆரம்பித்துள்ளதுடன், நத்தார் பண்டிகையை முன்னிட்டு மலிவு விற்பனையும் நடைபெறுகிறது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.

## லைடன் ரெக்ஸ்ரைல்ஸ் சென்ரர்

ஸ்தாபனத்தார்.

[சி-5393]



# பற்றீஸியன் தொழிற்கல்வி நிலையம்

அகில உலக கெயர்

## மரவேலை, கட்டுவேலை பயிற்சிகள்

அகில உலக கெயர் ஸ்தாபனத்துடன் [Care-International] இணைந்து எம்மால் நடாத்தப்படும் மேற்படி பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி தகமை:-**

15 வயதும் அதற்கு மேற்பட்டோரும்; 8 ஆம் வகுப்பும் அதற்கு மேற்பட்ட தராதரமும்.

**பயிற்சிக் காலம்:-**

2½ மாதம் ஸ்தாபனப் பயிற்சி 10 மாதம் பயிலுனர் வேலையாளர் பயிற்சி

**கொடுப்பனவு:-**

ஸ்தாபனப் பயிற்சியின் போது மாதம் 600/- ரூபாவும் பத்து மாத பயிலுனர் பயிற்சியின் போது வேலைக்குப் பொருத்தமான சம்பளமும் வழங்கப்படும். அத்துடன் இலவச உபகரண பொதியும் வழங்கப்படும்.

**சான்றிதழ்கள்:-**

பயிற்சி நிலைய பயிற்சி சான்றிதழ் தொழிற் பரீட்சை அடிப்படையில் தேசிய (அரசாங்க) தொழில் சான்றிதழ் சர்வதேச ரீதியிலான கெயர் ஸ்தாபன சான்றிதழ்

**இதர உதவிகள்:**

பயிற்சி முடித்தவர்களுக்கு சொந்தத்தில் முயற்சிகளை தொடங்க கெயர் ஸ்தாபனத்தின் மூலம் வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

**விண்ணப்பங்கள்:-**

பதிவாளர் பற்றீஸியன் தொழில் நிறுவனம் 59 சென் பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21-11-90 க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாகக் கை மூலமோ, தபால்மூலமோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பதிவாளர்,

**பற்றீஸியன் தொழில் நிறுவனம்**

(C/ 5390)


## மாவீரர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்துள்ளன.

வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம், தீவுப் பகுதியாக கண்காட்சி இடம் பெறும்.

உள்ளூர் பொருளாதாரத்தின் சிறப்புக்களை சகல துறைகளின் ஊடாகவும் வெளிப்படுத்தும் நோக்குடன் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கண்காட்சியில் தமிழீழ பொருளாதாரத்தின் வளர்ச்சியில் ஆர்வமும் அக்கறையும் உள்ள தமிழீழ தேசாபிமானிகளை, நிறுவனங்களை இணைந்து பணியாற்றும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

கண்காட்சியில் காட்சியறைகளை அமைக்க விரும்புவோர் எதிர்வரும் 18 ஆம் திகதிக்கு முன்னர் தமிழீழ ஆய்வு நிறுவனத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் கேட்கப்பட்டுள்ளது. (உ)

## சாவகச்சேரி...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

தால், உயிரிழப்பு தவிர்க்கப்பட்டது.

குண்டுவீச்சில் நுணாவிலைச் சேர்ந்த நடராசா ஆனந்தசேகர் [21 வயது] என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவர்கள் யாழ்ப்பாணம், மந்திகை, சாவகச்சேரி ஆஸ்பத்திரிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த மாதம் 9ஆம் திகதி சாவகச்சேரி சந்தை மீது ஹெலி தாக்குதல் நடத்தியதில் 12 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்த, ஒரு மாதத்தின் பின்னர் அதே திகதியில் நேற்றைய குண்டுவீச்சும் இடம்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஆஸ்பத்திரி.

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

திக்கு வெளியே — ஆஸ்பத்திரியிலிருந்து சுமார் பத்து யார் தொலைவில் — இலங்கை வங்கியின் பிரதான கிளைக்கு அருகே முதலாவது குண்டு வீசப்பட்டது.

முன்பு சீனச்சகடை விமானத்தால் சேதமாக்கப்பட்ட (ஆஸ்பத்திரிக்கு அருகே உள்ள) சாந்திகம் உளவள நிலையக் கட்டடம் மீது வீழ்ந்த இந்தக் குண்டால் அந்தக் கட்டடம் முற்றாகத் தரைமட்டமானது.

இதனால் ஆஸ்பத்திரி வார்ட் கண்ணாடிகள், கதவுகள் வீழ்ந்தன. கூரைகள் பறந்தன. தாதிகள் பயிற்சி கலாசாலைக் கட்டடமும், ஆஸ்பத்திரி சுற்றுமதில் சுவரும் சேதமடைந்தன.

இந்தச் சம்பவத்தின்போது இலங்கை வங்கியின் ஆஸ்பத்திரி வீதிக்கிளை, பிரதேச அலுவலகம் ஆகியவையும் சேதமடைந்தன.

சம்பவம் நடந்து கொண்டிருந்த போது ஆஸ்பத்திரி வளவில் கழிவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டிருந்த டிராக்டரின் சாரதியான ராஜேஸ் சிறீபிரியா (வயது 30 - கொழும்புத்துறை) என்பவர் காலில் காயமடைந்தார்.

வங்கியில் பணம் பெறுவதற்காக 'கியூ'வில் நின்ற தம்பையா அருணாசலம் (வயது 60 - உரும்பிராய்), வீதியால் சென்ற வினோதினி (வயது 19 - யாழ்ப்பாணம்) ஆகியோரும், மற்றும் இருவரும் காயமடைந்தனர்.

இந்த இடத்துக்குச் சற்றுத் தள்ளி முதலாம் குறுக்குத் தெருவில் வீசப்பட்ட இரண்டாவது குண்டினால் ஒரு வீடு பலத்த சேதமுற்றது. மேலும் மூன்று வீடுகள் சேதமுற்றன.

இந்த இடமும் ஆஸ்பத்திரி ... குறிப்பிடத்தக்கது.

(உ-3-15)


# மரண அறிவித்தல்கள்

## T. V சரவணபவான்

[பொறியியலாளர் - சுமிற்றோமோ சீமெண்ட் கொம்பனி ஜப்பான்]

(Mechanical Engineer Sumitomo Cement Company -Japan)

மாகியப்பிட்டியைச் சேர்ந்த வெற்றிவேலு சரவணபவான் அவர்கள் கொழும்பில் அகால மரணமானார். அன்னார் காலம் சென்ற வெற்றிவேலு-மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காலம் சென்றவர்களான கிருஷ்ணபிள்ளை-கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயரமணனின் (உடுவில் மகளிர் கல்லூரி மாணவன்) அன்புத்தந்தையும், மகேஸ்வரி, தங்கரத்தினம், கனகசிங்கம், செல்வராணி (ஆசிரியை, அருணாசலம் வித்தியாசாலை அளவெட்டி) ஆகியோரின் அன்புச் சகோதரரும், விஜயரத்தினம் (அவுஸ்திரேலியா), சிறினிவாசன் (நில அளவை அதிகாரி ஓமான்), திருமதி சி. விஜயலட்சுமி பாலசுப்பிரமணியம் (பொறியியலாளர் சிங்கப்பூர்), மோகனதாஸ் (பொலிஸ் இன்ஸ்பெக்டர் கொழும்பு), தங்கத்துரை, ராஜலு, யோகராசா (மக்கள் வங்கி-முல்லைத்தீவு) ஆகியோரின் மைத்துனரும், காலம் சென்ற சி. சிவசாமி (பதிவாளர்) யின் சகலனும், சி. அஞ்சலா (உயர்தரமாணவி-வேம்படி மகளிர் கல்லூரி), கண்ணன், கௌரி ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், சந்திரிகா, சசிகலா, டினேஸ், ரம்மியா, சிந்துஜா ஆகியோரின் அருமை மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 09-11-1990 வெள்ளிக்கிழமை அன்று கொழும்பு 31/31 கிராண்ட்பாஸ் இல்லத்தில் நடைபெற்று காலை 8.00 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்:

திருமதி ச. ஜெயலட்சுமி (மனைவி)

''ஜெயாபவனம்'',
மாகியப்பிட்டி,
சண்டிலிப்பாய் (14727)

## பாஸ்டர். ஏ. ஜோண்

இலங்கைப் பெந்தெகொஸ்தே சபையின் உப தலைவரும், யாழ்ப்பாணப் பிராந்தியத் தலைவருமான பாஸ்டர், ஏ. ஜோண் சுண்டிக்குளி விசுவாச வீட்டில் 09-11-90 வெள்ளிக்கிழமை மகிமைக்குள் பிரவேசித்தார்.

அடக்க ஆராதனை ஒழுங்குகள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;

சகோதரன்: ஏ. மகேந்திரன்,

இலங்கைப் பெந்தெகொஸ்தே சபை,
111, கண்டி வீதி,
சுண்டிக்குளி. (14736)

## திரு. செல்லப்பா சதாசிவம்

[ஒப்பந்தக்காரர்-அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்]

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த திரு செல்லப்பா சதாசிவம் அவர்கள் 8-11-90 வியாழக்கிழமை நள்ளிரவு சிவபதம் அடைந்தார். இவர் காலம் சென்ற செல்லப்பா நாகமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வனும், சரஸ்வதி, இராசேஸ்வரி ஆகியோரின் அன்புக் கணவரும், சற்குணராஜன் (ஜேர்மனி), மகேந்திரராஜன் (லிபியா), திருச்செல்வராஜன் (சதாஸ் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்), இராஜமலர், இரஜவதனி இராஜரமணி (பிரான்ஸ்), இராஜலோசனி ஆகியோரின் அருமைத் தந்தையாரும், பத்மாவதி (ஜேர்மனி), இந்திராணி கலாவதி, காலம் சென்ற மு. குற்றாலலிங்கம் (அஞ்சல் அதிபர் வண்ணார்பண்ணை), கு. குணபாலசிங்கம் (லிபியா), அ. குலேந்திரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஸ்ரீவிக்னேஸ்வரராஜ் (ஜேர்மனி), சர்மிளா (ஜேர்மனி), மகாலட்சுமி (ஜேர்மனி), காலம் சென்ற றமேஸ் (ஜேர்மனி), ரஜீவ் (ஜேர்மனி), சுசீலா (ஜேர்மனி), டினேஸ், அபினேஸ், சங்கீதா, ஜெயப்பிரிதா (சுண்டுக்குழி மகளிர் கல்லூரி), காலஞ்சென்ற சிந்துஜா, நிரோசன், விதூஷனி, விரேஸ்வரன், நர்மதா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், இ. பூபதி, இ. நல்லம்மா, செ. நடேஸ்வரி ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 9-11-90 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் பி.ப 4 மணி அளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:

இ. பூபாலசிங்கம் [மருமகன்]

ராஜ பவனம்,
206 (514), கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நாம்பூபால்,
யாழ்ப்பாணம்.
(14285)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## உதயன்

### சர்வதேசம் அவமதிப்பு!

யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரி மீண்டும் யாழ் நகரில் இயங்கத்தொடங்கிய ஒன்றரை மணி நேரத்தில், அதற்கு அருகில், பத்து யார் தொலைவில் விமானப் படையின்யுத்தவிமானங்கள் நேற்று குண்டு பொழிந்து விட்டுச் சென்றன

ஆஸ்பத்திரியை மீண்டும் இயங்கச் செய்தல். அதற்காக ஆஸ்பத்திரி வலயம்; அதனைச் சுற்றிப் பாதுகாப்புப் பகுதி; குறிப்பிட்ட பகுதிகளில் இராணுவ நடவடிக்கை எதுவும் இடம்பெறலாகாது — என்பவற்றுக்கு அரசாங்கம் இணங்கியதன் பேரிலேயே செஞ்சிலுவைச் சங்கம் யாழ் ஆஸ்பத்திரிப் பாதுகாப்பைப் பொறுப் பேற்றது.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறை விதிகளைக் கடைப்பிடிக்க இணங்குவதாக, யுத்தத்தில் சம்பந்தப்பட்ட அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒப்புக்கொண்டதன் பெயரில்தான் ஆஸ்பத்திரி வலயம், பாதுகாப்புப் பகுதி என்பன உருவாக்கப்பட்டன.

யாழ். ஆஸ்பத்திரியை செஞ்சிலுவைச் சங்கம் பொறுப்பேற்றுள்ளது அதற்கு அரசாங்கம் முழு ஒத்துழைப்பையும் நல்கும் —என்று வெளிநாட்டுத் தூதுவர்களிடம் அமைச்சர் ரஞ்சன் 3 நாட்களுக்கு முன் "புளுகினார்"! ஆனால்அதில் உதயனுக்கு நம்பிக்கை இருக்கவில்லை. அதனால் தான் நேற்று முன்தினம் எமது சந்தேகத்தைக் கிளப்பி, செஞ்சிலுவைச் சங்கத்தை விழிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொண்டோம்.

உதயனின் சந்தேகம் சரியாகிவிட்டது!

அடுத்த தரப்பில் இருந்து ஆத்திரமூட்டும் செயல் எதுவும் நடக்கவில்லை. ஆஸ்பத்திரியிலோ, பாதுகாப்புப் பகுதியிலோ இராணுவத் தளம் எதுவும் இருக்கவும் இல்லை; நிச்சயமாகப் பொதுமக்கள் இலக்கு மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இது சர்வதேச ரீதியாகக் கண்டிக்கப்படவேண்டியது. தண்டிக்கப்படவும் வேண்டியது.

இந்தத் தாக்குதல் மூலம் ஸ்ரீலங்கா அரசு தனது சர்வதேசக் கடப்பாட்டை மீறிவிட்டது. கேவலம் செஞ்சிலுவைச் சங்கத்தை மட்டுமன்றி சர்வதேசங்களையுமே அது ஏமாற்றிவிட்டது. சர்வதேச சமூகத்தை அவமதிப்புச் செய்துவிட்டது.

அது மட்டுமல்ல. புலிகளின் இலக்குகள் மீதே தாக்குதல் நடத்துகிறோம்; தமிழ் மக்கள் மீதல்ல என்று தான் கூறி வந்த பொய்யையும் அம்பலமாக்கி விட்டது. அதற்கு செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளே சாட்சி அவர்கள் விடுத்திருக்கும் அறிக்கையே ஆதார ஆவணம்;

தானே இணங்கிய சர்வதேசக் கடமையையும் மீறி, அரசாங்கம் தமிழ் மக்கள் மீது தாக்குதல் நடத்துவதிலிருந்து அதன் உண்மையான நோக்கத்தையும், இலக்கையும் உலகநாடுகள் இலகுவில் புரிந்துகொள்ளலாம்

ஓர் இனத்தை அழிக்க முற்பட்டிருக்கும் ஸ்ரீலங்கா அரசை ஆதரிக்கலாமா, அதனைப் பார்த்துக் கொண்டிருக்கலாமா என்று உலக நாடுகள் தீர்க்கமாக முடிவு செய்ய வேண்டிய வேளை வந்து விட்டது.

# புதிய பங்கீட்டு முறை இன்று முதல்
# அமுலுக்கு வருகிறது

யாழ்ப்பாணம், நவ. 10

இடம்பெயர்ந்தோருக்கான 4 ஆம் கட்டம், தொழில் பாதிப்புற்றோர். 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோர் ஆகியோருக்கான மூன்றாம் கட்டம் ஆகிய நிவாரணம் வழங்குவதற்கான புதிய பங்கீட்டு முறை இன்று முதல் அமுலுக்கு வருகிறது.

நேற்று செயலகத்தில் நடைபெற்ற நிவாரண விநியோகம் சம்பந்தமான கூட்டத்தில் மேற்கண்ட முறை பற்றி முடிவு செய்யப்பட்டது

இது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு;-

★ அரசாங்க அதிபரால் புதிதாக வழங்கப்பட்டுள்ள உலர் உணவு விநியோக அட்டைக்கு மட்டுமே இந்த விநியோகம் மேற்கொள்ளப்படும். அட்டை பெறாதவர்கள் உடனடியாகக் கிராம சேவையாளர்களிடம் பெற வேண்டும்.

★ முன்பு வழங்கப்பட்ட பங்கீட்டு அட்டைக்குப் பொருள்கள் பெற முடியாது

★ இந்த விநியோகம் இன்று ஆரம்பிக்கப்பட்டு 25 ஆம் திகதிக்குள் முடிக்க வேண்டும்.

[பங்கீட்டு அளவு விவரப் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது ] (இ - 3)

| குடும்ப அங்கத்தவர் | ஒருவர் | | இருவர் | | மூவர் | | நால்வர் | | ஐவருக்கு மேல் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கி. | ரூ.ச. | கி. | ரூ.ச. | கி. | ரூ.ச. | கி. | ரூ.ச. | கி. | ரூ.ச. |
| அரிசி | 2 | 26.00 | 4 | 52.00 | 5 | 65 00 | 6 | 78.00 | 8 | 104 00 |
| மா | 1 | 14 25 | 2 | 28 50 | 2½ | 35.75 | 3 | 42 75 | 3 | 42.75 |
| சீனி | ½ | 15 00 | 1 | 30 00 | 1 | 30 00 | 1½ | 45.00 | 2 | 60.00 |
| பருப்பு | ¼ | 10 00 | ½ | 20.00 | ½ | 20.00 | ¾ | 30.00 | 1 | 40 00 |
| விட்டாஸ்பிறே | | — | | — | 1 | 36 40 | 1 | 36.40 | 1 | 36.40 |
| மண்ணெண்ணெய் (லீற்) | ¼ | 2.00 | | 2.00 | ¼ | 2.00 | ¼ | 2 00 | ¼ | 2.00 |
| மீதிப்பெறுமதி இல்லாறய் பொருட்கள் அல்லது சீனி/விட்டாமில்க் | | 16 75 | | 21.50 | | 20.85 | | 17.85 | | 29.85 |
| | | 84.00 | | 154 00 | | 210.00 | | 252 00 | | 315 00 |

### மின்கம்பிகளைத் திருடினாராம்

மின்கம்பிகளைத் திருடினார் என்று கூறப்படும் நபர் ஒருவர் அவற்றை விற்க முயன்றபோது பிடிபட்டாராம்.

சங்கானையில் இச்சம்பவம் இடம்பெற்றது.

260 அடிநீளமுள்ள சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியானமின் கம்பிகளே திருடப்பட்டவையாகும். இவற்றைத் திருடியவர் பெண் ஒருவரிடம் 300 ரூபாவுக்கு விற்முயன்றாராம் விடுதலைப்புலிகள் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். (இ)

# வேலணை, மருதங்கேணியிலும் விரைவில் ஜன சக்தித் திட்டம்

யாழ்ப்பாணம், நவ. 9

வேலணை, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் விரைவில் ஜன சக்தித் திட்டம் அமுல் செய்யப்படவிருக்கிறது.

யாழ் மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக யாழ் - உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மட்டுமே ஜனசக்தி திட்டம் அமுல் செய்யப்பட்டது.

இந்த திட்டம் வெற்றி அளித்துள்ளதை அடுத்து மேலும் இந்த இரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் திட்டத்தை அமுல் நடத்த செயலக அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தப் பிரிவுகளுக்கான ஜனசக்தி பத்திரங்கள் மாத இறுதிக்குள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

### சர்வதேச கடப்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது:

ஆஸ்பத்திரியைச் சூழவுள்ள பாதுகாப்புப் பகுதியை நாம் மிகத் தீவிரமாகக் கண்காணித்து வருகிறோம்.

இந்தப் பகுதியில் இராணுவத் தளங்களோ, நிலையங்களோ ஏதும் இல்லை

அப்படி இல்லாத ஒரு பகுதி மீது - ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பகுதியில் இத்தகைய தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது இரண்டாவது கடுமையான விடயம்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மிகப் பாரதூரமான மீறல் சம்பவம் என்று கருதுகிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும், நாட்டிற்கும் எதிராக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் அரசாங்கத்தினால் - சர்வதேச கடப்பாடுகளை மீறும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பாரதூரமான மீறல் சம்பவமாக நாம் இதனைக் கருதுகிறோம்.

யாழ் ஆஸ்பத்திரியை மீளத் திறப்பது தொடர்பாக நாம் சமர்ப்பித்த வரைபடத்தை அல்லது ஒப்பந்த ஏற்பாட்டை அரசு எந்தக் கட்டத்திலும் எதிர்க்கவில்லை:

மாறாக —

எமது முயற்சிக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாகவும்-

ஆஸ்பத்திரியை இயங்கச் செய்வது தொடர்பான விதிகளுக்கு முற்றாகக் கட்டுப்பட்டு செயற்படுவதாகவும் இலங்கை பாதுகாப்பு துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

ஆனால் அதன் பின்னரும் இத்தகைய மீறல் இடம்பெற்றிருக்கிறது இது போன்ற மீறல்களை இனிமேலும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியாது.

ஆஸ்பத்திரி இயங்குவது தொடர்பான ஒழுங்கு விதிகள் மீறப்படுவது தொடர்ந்தால்! இந்த விடயத்திலிருந்து ஒருதலைப்பட்சமாக ஒதுங்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை

இந்தத் தாக்குதல் சம்பவம் வேண்டுமென்றே அல்லது தவறுதலாகவோ நடந்திருக்கலாம்; ஆனால் அது எமக்கு பொருட்டல்ல. ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கிறது என்பது தான் முக்கியம் - என்றார்.

கேள்வி:- இந்தத் தாக்குதல் சம்பவம் நிகழவில்லை என்று அரசு மறுப்புத் தெரிவித்தால் ......?

பதில்:- மறுப்பு என்பதற்கே இடமில்லை; நாங்கள் கண்களினால் பார்த்த விடயத்துக்கு அரசு மறுப்புக் கூற முடியாது.

இந்தத் தாக்குதல் குறித்து உடனடியாக இலங்கை அரசின் உயரதிகாரிகளுடன் பல மட்டங்களில் தொடர்பு கொண்டோம்; பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதி அலுவலகம் ஆகியவற்றுடனும் உடனே தொடர்பு கொண்டோம்.

அந்தத் தொடர்பினால் இடைத்தி... அபிறுமேல ... முற்றா ... ளித்தப்

படுத்த முடியாது.

ஆனால் நாம் தொடர்பு கொண்டதை அடுத்து இன்று வெள்ளி காலை 9.30 மணிக்கு உடனடியாக உத்தரவு ஒன்று கூட்டுப்படைத் தலைமையத்தினால் வடபகுதி படைப்பிரிவுக்கு விடுக்கப்பட்டது

அந்த உத்தரவின்படி அந்த நேரத்திற்குப் பிறகு யாழ்ப்பாணப் பட்டினத்தின் தென் கோடிப் பகுதி மீது எந்த வித வான் தாக்குதலும் நடத்த வேண்டாம் என்று படையினருக்கு பணிக்கப்பட்டிருக்கிறது என்று மட்டும் என்னால் கூறமுடியும்.

கேள்வி: அப்படி என்றால் யாழ்ப்பாணம் முழுவதும் வான் தாக்குதல் நடைபெறக் கூடாது என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்று கொள்ளலாமா?

பதில்;- சரியான விவரம் என்னால் கூறமுடியாது. ஆனால் அந்த உத்தரவின் படி ஆஸ்பத்திரி பாதுகாப்புப் பிரதேசத்தில் வான் தாக்குதல் நடத்தக் கூடாது என பணிக்கப்பட்டிருக்கிறது என்று மட்டும் என்னால் விளக்க முடியும்.

இத்தகைய உத்தரவு இப்போது உடனடியாக விடுக்கப்பட்டதிலிருந்து எமக்கு ஒன்று தெரிகிறது; அதாவது இந்த ஒப்பந்த மீறலை அரசு ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதுதான் அது.

இத்தகைய தாக்குதல் சம்பவம் இதுதான் முதலும் கடைசியும் என நாம் நம்புவோம். ஆஸ்பத்திரியைமூடாமல் தொடர்ந்து இயங்கச் செய்ய மற்றொரு சந்தர்ப்பத்தைக் கொடுப்போம் என்றார். (உ-3-5)

### ரயில்வே வாரண்ட்

கொழும்பு, நவ. 10

ஓய்வூதியம் பெறுபவர்களுக்கான ரயில்வே வாரண்ட்டுகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் பிரதேச உதவி அரச அதிபர் அலுவலகங்களினால்வழங்கப்படவுள்ளன.

தற்போது மாவட்டத்தில் உள்ள கச்சேரிகளுக்குச் சென்றே ஓய்வூதியர்கள் 'வாரண்ட்டு' களைப் பெற்று வருகின்றனர். [ஆ-எ]

### சோடா என நினைத்து மண்ணெண்ணெய் குடித்த குழந்தை

தென்மராட்சி, நவ. 10

போத்தலில் இருந்த மண்ணெண்ணெய்யை சோடா என்று நினைத்துக் குடித்த குழந்தை ஒன்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது.

சரசாலை தெற்கைச் சேர்ந்த சுரேந்திரன் (வயது2) என்பவரே மண்ணெண்ணெய் குடித்தவர் ஆவார் (இ-117)

### ப. நோ. கூ. சங்க கிளை இடம் மாற்றம்

கோப்பாய், நவ. 10

நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தின் கோப்பாய் சந்திக் கிளை பாதுகாப்பு காரணமாக கோப்பாய் வடக்கு வெங்காயச் சங்கத்தில் இயங்கி வருகின்றது. (இ-72)

### விமானத்.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தாவது:-

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புப் பொறுப்பில் அண்மையில் மீளத் திறக்கப்பட்ட யாழ் போதனா ஆஸ்பத்திரிக்கு மேலே இன்று காலை 7 45 மணியளவில் இலதடவைகள் சுழன்று (வட்டமிட்ட) சியாமச்செட்டி ரக விமானம் ஒன்று கீழேகுத்தி-

யாழ் ஆஸ்பத்திரி வீதி-பருத்தித்துறை வீதி சந்திக்கும் இடத்தில் செஞ்சிலுவைக் குறியிடப்பட்ட ஆஸ்பத்திரியின் தென்கிழக்கு மூலையில் குண்டு ஒன்றைப் போட்டது.

மீண்டும் இல தடவைகள் வட்டமிட்ட பின்னர் அதே விமானம், ஆஸ்பத்திரி வளவைச் சூழ மிகத் துலக்கமாக குறிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்புப் பகுதிக்குள் மற்றொரு குண்டை வீசியது.

இந்தச் சம்பவத்தினால் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினால் பாதுகாப்பு அளிக்கப்படும் ஆஸ்பத்திரியின் வளவுக்குள் ஒருவர் காயமடைந்தார். பாதுகாப்புப் பகுதிக்குள் மேலும் நான்கு பேர் காயமுற்றனர்.

ஆஸ்பத்திரியின் நான்கு கட்டடங்களின் கூரைகளும் ஜன்னல்களும் இந்தக் குண்டு வெடிப்பினால் தூக்கி வீசப்பட்டுள்ளன.

கடும் ஆட்சேபத்தைத் தெரிவித்து, இத்தகைய பாரதூரமான மீறல் மீண்டும் இடம்பெறாது என்ற உறுதியைப் பெறுவதற்காக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு ஸ்ரீலங்கா அதிகாரிகளுடன் உடனடியாகத் தொடர்பு கொண்டது.

ஆஸ்பத்திரி வலயத்திற்கும் அதைச் சூழவுள்ள பாதுகாப்பு பகுதிக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் தீவிரமான முறையில் மதிப்பளித்தால் மட்டுமே, அண்மையில் மீள ஆரம்பித்த தனது மனிதாபிமான கடமைகளை யாழ். போதனா ஆஸ்பத்திரி தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்பதை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகமூட்ட விரும்புகிறது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-3-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். ஆஸ்பத்திரிக்கு நோயாளர் இடமாற்றம்

யாழ் - போதனா ஆஸ்பத்திரி நேற்றுக்காலை 6 மணிக்கு மீண்டும் பழைய இடத்தில் இயங்கத் தொடங்கியதை அடுத்து, மானிப்பாய் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த நோயாளர்கள் யாழ். ஆஸ்பத்திரிக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை இடம்பெற்ற விமானத் தாக்குதலினால் நோயாளரை இடம் மாற்றும் பணி சிறிது நேரம் தடைப்பட்டது.

எனினும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளின் உறுதிமொழியைத் தொடர்ந்து பின்னர் நோயாளர் இங்கு கொண்டுவரப்பட்டனர்.

வார்ட்டுகளுக்கு செல்பவர்களுக்கு பாஸ் வழங்க விசேட கருமபீடம் ஒன்று ஆஸ்பத்திரியில் இயங்கியது.

வார்ட் பாதுகாப்பு வேலைகளிலும், நோயாளர்களை அனுமதிக்கும் வேலைகளிலும் யாழ் - செஞ்சிலுவைத் தொண்டர்கள் ஈடுபட்டனர். வார்ட்டுகளுக்குள் செல்லும் நோயாளர்களுடன் எடுத்துச் செல்லப்பட்ட பொதிகளும் சோதனையிடப்பட்டன. (உ-3)

## ஹெலிகள் கண்டபடி தாக்கு

யாழ்ப்பாணம், நவ. 10

திருநெல்வேலியில் நேற்று மாலை நடந்த பொம்மர் குண்டுவீச்சைத் தொடர்ந்து, ஹெலித் தாக்குதலும் இடம்பெற்றது.

இரு ஹெலிகள் திருநெல்வேலி, கொக்குவில், கோண்டாவில், கல்வியங்காடு பகுதிகளில் சுற்றிச் சுற்றிப் பறந்து கண்மூடித்தனமாக கலிபர் தாக்குதலை நடத்தின.

நீண்ட காலத்தின் பின்னர் நடந்த இந்தத் தாக்குதலினால் மக்கள் பெரும் பதற்றமுற்றனர். (ஓ)

## மன்னார் தமிழரை அழிக்கும் நடவடிக்கையில் அரசு

### விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

கொழும்பு, நவ. 10

மன்னார் மாவட்டத்தில் தமிழ் மக்களை அழிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கொலைக்கும்பல் ஒன்றையும் தென்இலங்கையில் உள்ள முஸ்லிம் காடையர் கும்பல் ஒன்றையும் பயன்படுத்தி அரசு தமிழரை அழித்து வருகிறது.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் குற்றஞ் சாட்டியுள்ளதாக ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன. (அ-எ)

## ஆஸ்பத்திரி ஊழியரை சீருடையில் வரப் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்கள் அனைவரும் சீருடையிலேயே கடமைக்கு சமுகமளிக்க வேண்டும் என வைத்தியசாலை நிர்வாகம் கோரி உள்ளது.

இதேவேளை சகல ஊழியர்களும் தமது வேலைக்கான அடையாள அட்டையையும் வைத்திருத்தல் வேண்டும்.

இவை இரண்டும் இல்லாது கடமைக்கு வரும் எந்த ஊழியரும் கடமைக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஊழியர்கள் கடமைக்கு செல்லும்போதும் கடமையிலிருந்து செல்லும்போதும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் சோதனைக்கு உட்படுத்தப்படுவர். (ஓ-5)


### CLERGY RETREAT

### குருமார் தியானம்

யாழ். மறைவட்ட குருக்களின் தியானம், பண்டத்தரிப்பு ஞான ஒடுக்க இல்லத்தில் நடைபெற இருக்கின்றது.

★ 1 ஆம் குழு: 12 ஆம் திகதி — 17 ஆம் திகதி வரை
★ 2 ஆம் குழு: 19 ஆம் திகதி — 24 ஆம் திகதி வரை

தகவல்:
அருள்திரு J.P.E. செல்வராஜா
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம். (14734)



### யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை

### மாவீரர் தினம் பற்றிய கலந்துரையாடல்

மாவீரர் தினம் கொண்டாடுவது பற்றிய ஆலோசனைக் கூட்டம் சிறாப்பியடி லேனில் அமைந்துள்ள மணியம்ஸ் கட்டடத்தில் 11-11-90 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. ப. நோ. கூ. சங்கத் தலைவர்களும், தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத் தலைவர்களும், அங்கத்துவ சங்கப் பிரதிநிதிகளும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

சி. சிவமகராசா
தலைவர்
யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை
(சி/5399)


### வடக்கு- கிழக்கு இணைப்பு:

# நாடு முழுவதிலும் வாக்கெடுப்பு வேண்டும் என்கிறது பௌத்த குழு

கொழும்பு, நவ. 10

வடக்கு – கிழக்கு மாகாணத்தை நிரந்தரமாக இணைப்பது குறித்து கிழக்கு மாகாணத்தில் மட்டுமன்றி, நாடு முழுவதிலும் சர்வசன வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

பௌத்தசாசனம், பௌத்த சமய விவகாரங்கள் கண்காணிப்பு - நடைமுறைக் குழு, ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவிடம் அண்மையில் கையளித்த மகஜரில் இவ்வாறு கோரியுள்ளது.

இந்த மகஜரில் குழுவின் சார்பில் பௌத்த குருமார்களும், பௌத்த சங்கங்களின் தலைவர்களும் ஒப்பமிட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கு இணைப்பை [கிழக்கில்] சர்வசன வாக்கெடுப்பு நடத்தாமலே நிரந்தரமாக்குவது குறித்து கொழும்பில் அரசியல் முயற்சிகள் இப்போது நடந்து வருகின்றன.

ஆனால் பௌத்த சாசன நடைமுறைக் குழு வடக்கு - கிழக்கு இணைப்பை எதிர்த்து மிக நீண்ட மகஜர் ஒன்றைச் சமர்பித்துள்ளது.

அந்த நீண்ட மகஜரில் கிழக்கு சரித்திர காலம் தொட்டே சிங்களவர்களும் வாழும் பிரதேசமாகவுள்ளது என்றும் அதனைத் தமிழர்கள் தமது பாரம்பரிய தாயகம் என்று உரிமை கொண்டாட முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கும் – கிழக்கும் இணைந்தால் தமிழர் ஆதிக்கம் கொண்ட மாகாண சபையே செயற்படும் என்றும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

**மாகாணசபை ஒழிக்கப்படவேண்டும்**

இனப் பிரச்சினைக்குத் தீர்வாகக் கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறை நாட்டில் பெரும் குளறுபடிகளைத் தோற்றுவித்துள்ளது. எனவே மாகாண சபை முறையை முற்றாக ஒழித்துவிட வேண்டும் என்பதே எமது அடிப்படைக் கோரிக்கையாகும் -

வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் எந்த வகையிலும் ஒன்றாக இணைப்பதை நாம் வன்மையாக எதிர்க்கிறோம் - என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## தீப்பெட்டி கொண்டுவர அனுமதி

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பயணிகள் தீப்பெட்டி எடுத்து வருவதற்கு வவுனியாவிலுள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனராம்.

இதுவரை வடபகுதிக்கு — வவுனியாவுக்கு இப்பால் தீப்பெட்டி எடுத்துவருவதற்கு படையினர் தடை விதித்திருந்தனர். (ஓ-3)

## கொழும்பில் அதிரடிப்படை

கொழும்பு, நவ. 10

கொழும்பு நகரில் பதற்ற நிலை ஏதும் நிலவாதபோதும், அங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

கேந்திரப் பகுதிகளில் அதிரடிப் படையினர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஓ-3)

## ஷெல் தாக்கு

யாழ்ப்பாணம், நவ 10

காங்கேசன்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று மாவிட்டபுரம் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [ஓ 5]

## தமிழ் அகதிகள் 60 பேர் கைது

யாழ்ப்பாணம், நவ. 10

கடந்த புதனன்று சினன்குடா, கிளப்பன்பேர்க்கில் அமைந்துள்ள அகதி முகாமைச் சுற்றி வளைத்த படையினர் அங்கிருந்த 60 ஆண்களைக் கைது செய்து முகாமுக்குக் கொண்டு சென்றதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே அகதி முகாமிலிருந்து சில நாட்களுக்கு முன்னர் இராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவலர்களாலும் கொண்டு செல்லப்பட்ட 23 [illegible] குறிப்பிடத்தக்கது. [உ]

## திருமலைப் பகுதியில் புதிய இராணுவ முகாம்கள்

யாழ்ப்பாணம், நவ. 10

நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்டத்திலுள்ள இறக்கக்கண்டி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினர் சலப்பையாறு மலை, கும்புறுப்பிட்டி ஆகிய இடங்களில் முகாம் அமைத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே சமயம் இறக்கக்கண்டிக்கும் கும்புறுப்பிட்டிக்கும் இடையில் மிதிவெடியில் சிக்கி ஒரு சிப்பாய் காலை இழந்ததாகவும்—

அன்றைய தினம் பிற்பகல் 3 மணியளவில் கும்புறுப்பிட்டி காட்டுப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் 3 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர் என்றும்—

சொத்திக்குளம் காட்டுப் பகுதியில் மிதிவெடியில் சிக்கி மற்றுமொரு சிப்பாய் கால் இழந்தார் என்றும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [உ]

## 4 புலிகள் வீரமரணம்!

நேற்று ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக பரவலாக இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் 4 போராளிகள் வீரமரணமடைந்ததாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

லோலோ [உடையார் மகாராசா - அளவெட்டி], குட்டமன் [தாமோதரம் பிள்ளை பிரபாகரன் - தாவளை], அலெக்ஸ் [கிட்ணர் சுகந்தன் - வரணி], பழனி [கிளிநொச்சி] ஆகியோரே வீரமரணமடைந்தனர். [உ]

## மாவீரர் தின யாத்திரை

யாழ்ப்பாணம், நவ 10

இம் மாதம் 27 ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாவீரர் தினத்தை முன்னிட்டு வடமராட்சியில் எழுச்சி யாத்திரை ஒன்று இடம்பெற்று வருகிறது.

விடுதலைப் புலிகளின் மகளிர் படைப் பிரிவினரால் நடாத்தப்பட்டு வரும் இந்த எழுச்சி யாத்திரை கடந்த 3 ஆம் திகதி வதிரி தேவரையாளிக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்டது.

27 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள இவ் எழுச்சி யாத்திரை வடமராட்சிப் பகுதி முழுவதுமே இடம்பெறவுள்ளது.

மக்களைக் கவரும் வண்ணம் 'பாண்ட்' வாத்தியங்களுடன் அமைந்துள்ள இந்த எழுச்சி யாத்திரையை கண்டுகளிப்பதற்காக மக்கள் பெரும் கூட்டம் கூட்டமாக ஆங்காங்கே திரள்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. [இ-15]


## மரண அறிவித்தல்

### பிரம்மஸ்ரீ சிவாசோசர்மா

புன்னாலைக் கட்டுவன் பிரம்மஸ்ரீ சிவாசோசர்மா [இளைப்பாறிய உத்தியோகத்தர், இலங்கை புகையிரதத் திணைக்களம்] அவர்கள் 9-11-1990 வெள்ளியன்று சிவபதமடைந்தார்.

இவர் காலம்சென்ற சிவானந்தசர்மா, பொன்னம்மாள் ஆகியோரின் புதல்வரும், காலஞ்சென்ற முதலியார் சோமசுந்தரஐயர் அவர்களின் மருமகனும், இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயவர்த்தனி, சிவசங்கர் [கனடா] ஆகியோரின் தந்தையுமாவார்.

ஈமக்கிரியைகள் வெள்ளி அன்று [9-11-90] இணுவில் பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் அவர்களின் இல்லத்தில் நடைபெற்றது. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. வீரமணிஐயர்
பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் வீதி,
இணுவில். [14733]


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 10-11-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org